THE MADRAS LEGISLATIVE COUNCIL

Wednesday, the 28th February 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

MR. CHAIRMAN : The questions relating to the Hon. the Chief Minister (Nos. 105 to 109) are postponed.

Oil and Natural Gas Commission

* 110. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether the Oil and Natural Gas Commission had explored for oil deposits in Pudukkottai, Pattukkottai, Aranthangi, Nagapattinam and Thiruthuraipundi areas on 14th July 1967 ;

(*b*) the places where explorations for deposits of oil have been carried out in Tamil Nad ;

(*c*) the areas where such explorations are proposed to be carried out ; and

(*d*) the details thereof ?

எண்ணெய் இயற்கை வாயு ஆணைக்கழகம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967 ஜூலை 14-ம் தேதி புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, ஆகிய பகுதிகளில், எண்ணெய் இயற்கை வாயு ஆணைக்கழகம் எண்ணெய் வளம் பற்றி ஆராய்ந்ததா ?

(இ) தமிழகத்தில் எண்ணெய் வளம் பற்றி அண்மையில் எங்கெங்கு ஆராய்ந்தது ?

(உ) இனி எங்கெங்கு ஆராயவிருக்கிறது ?

(எ) அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ), (இ), (உ), and (எ) இந்திய அரசு நிறுவனமான எண்ணெய் இயற்கை வாயு ஆணைக்குழு இம்மாநிலத்தில் எண்ணெய் புலனாய்வுப் பணியின் பொறுப்பு வகிக்கிறது.

[28th February 1968

எண்ணெய் இருக்கிறதா என்று ரஷிய வல்லுனர் உதவியோடு ஆய்வு நடத்தப்பட்டது. காரைக்கால் பகுதி, கொள்ளிட முகத்துவாரப் பகுதி, பாம்பனுக்கு வடக்குப் பகுதி ஆகியவற்றில் எண்ணெய் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பட்டுக்கோட்டை, திருப்பூண்டி, கந்தர்வக்கோட்டை, திட்டச்சேரி, நிரவி, நாகை ஆகிய பகுதிகளில் கிணறுகள் தோண்டப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

இக்குழுவிடமிருந்து கேட்ட மேற்கொண்ட விவரங்கள் இன்னும் வர வில்லை. எண்ணெய், இயற்கை வாயு ஆணைக்குழுவிடமிருந்து இந்த விவரங்கள் வரப்பெற்றதும் அவை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் காரைக்கால் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அது தரமுள்ள எண்ணெய் என்றும் பத்திரிகையில் செய்தி வந்ததே. அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அது பற்றிய செய்தியை நானும் செய்தித்தாளில்தான் பார்த்தேன். அது பற்றிய முழு விவரமும் நமக்கு வரவில்லை. தனிக்கேள்வி கேட்டால் தக்க விவரமறிந்து கூறப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய்க் கிணறு ஒன்றைப் பரவலாக வெட்டப்பட்டதாக செய்தி வந்தது. அது மறுபடியும் கைவிடப்பட்டதாக அறிகிறேன். அதற்கு எவ்வளவு உத்தேச மாக செலவு செய்யப்பட்டது ? அது ஏன் மறுபடியும் கைவிடப்பட்டது. ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டைப்பகுதியில் இரண்டு மூன்று இடங்களில் தோண்டப்பட்டது. 1,963 மீட்டர் தோண்டப்பட்டும் அங்கே எண்ணெய்க்கான அறிகுறி தென்படவில்லை. திருப்பூண்டியில் 1,141 மீட்டர் தோண்டியும் எண்ணெய் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. கந்தர்வக் கோட்டையில் 1,000 மீட்டர் தோண்டியும் எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறி இல்லை. திட்டச்சேரியில் 1,770 மீட்டர் தோண்டிய பிறகு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றுகிறது. நிரவியில் 1,704 மீட்டர் தோண்டியும் இது வரையில் எண்ணெய்க்கான அறிகுறி தென்பட வில்லை. காரைக்கால் பகுதியில் 3,147 மீட்டர் தோண்டப்பட்டதில் எண்ணெய்க்கான அறிகுறி காணவில்லை. நாகைக்கு அருகில் 2,826 மீட்டர் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். அது பற்றிய முழு விவரம் தெரிய வில்லை. இருக்கிற சில இடங்களில் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்று கின்றன. எண்ணெய் இருக்கக்கூடும் என்று தோன்றுகிறதே தவிர வியாபாரம் செய்வதற்கான அளவிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. அது பற்றிய முழு விவரக் குறிப்பு கிடைக்கவில்லை. விவரம் வந்தவுடன் சபையில் வைக்கப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், காரைக்கால் பகுதியில் எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டதன் விவரம் செய்தித்தாளில்தான் பார்த்ததாகச் சொன்னார்கள். அந்த விவரங்களை சம்பந்தப்பட்டவர்கள் அவ்வப்போது அரசுக்குத் தெரிவிப்பார் களா ? இல்லையா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாநில அரசு துறை யினருக்கு அதில் தொடர்பு உண்டு. கேட்பதன் மூலமாக அதன் நட வடிக்கைகளை அறிந்து எடுத்துச் சொல்லும் வாய்ப்பு உண்டு.

Centre's aid for Tamil Development

*111 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —